# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

### மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | கணிதம் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் ..........................................................................................................

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) $40, 50, 60, 70, \ldots$ எனும் தொடரில் அடுத்துவரும் இரு எண்களையும் தருக.

02) சுற்றளவு $30 \text{ cm}$ ஆகவுடைய சமபக்க முக்கோணி ஒன்றின் ஒருபக்க நீளம் யாது?

03) $130^0$ இன் மிகை நிரப்புகோணம் யாது?

04) பெறுமானம் காண்க. $(-15) \times (+4)$

05) சுருக்குக. $2x + 4\text{y} + 5x - 2\text{y}$

06) ஒழுங்கான எண்முகி ஒன்றின் முகங்கள் எவ் வடிவானவை?

07) காரணிப்படுத்துக. $12p + 15q$

08) $6005\text{kg}$ ஐ மெட்ரிக் தொன்னில் தருக.


09) $(3xy)^5$ ஐ வலுக்களின் பெருக்கமாகத் தருக.

10) சாய்சதுரம் ஒன்றின் சுழற்சிச்சமச்சீர் வரிசை யாது?



kalvi.lk

11) உருவில் $x$ இன் பெறுமானத்தைக் காண்க.





12) பெறுமானம் காண்க. $148 \div 1000$

13) $\square : 5 = 6 : 15$ இல் வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண் யாது?


14) தீர்க்க. $5x - 8 = 17$

15) உருவிலுள்ள பாத்திரத்தில் $150ml$ கனவளவுள்ள பானம் உள்ளது எனில், இப்பாத்திரத்தின் கொள்ளளவை மதிப்பிடுக.




16) $x < 2$ எனும் சமனிலியை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.

17) உருவிலுள்ள முக்கோணி PQR இன் பரப்பளவு $48\text{cm}^2$ எனின், $h$ இன் பெறுமானத்தைக் காண்க.




18) உருவில் $x$ இன் பெறுமானத்தைக் காண்க.




19) நீள, அகல, உயரங்கள் முறையே 10cm ,8cm, 5cm ஆகவுள்ள கனவுருக்குற்றியின் மொத்த மேற்பரப்பின் பரப்பளவைக் காண்க.

20) 1 : 200 எனும் அளவிடையில் வரையப்பட்டுள்ள கட்டடத்தின் கிடைப்படம் ஒன்றில் 3cm இனால் குறிக்கப்படும் தூரத்தின் உண்மை நீளத்தை m இல் காண்க.

(2x20 = 40புள்ளி)

## பகுதி - II

❖ விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01] a) சுருக்குக. $2\frac{2}{5} \times 1\frac{2}{3}$

b) கமல் ரூ.50000 உம் விமல் ரூ.75000 உம் முதலீடு செய்து ஜனவரி முதலாம் திகதி வியாபாரமொன்றை ஆரம்பித்தனர். அதற்கு 2 மாதங்களின் பின் சுனில் ரூ.100000 ஐ முதலீடு செய்து அவ்வியாபாரத்தில் இணைந்து கொண்டார். அவ்வியாபாரத்தினால் ஒரு வருட இறுதியில் ரூ.150000 இலாபமாகக் கிடைத்தது.

i. கமல், விமல், சுனில் ஆகியோருக்கிடையே இலாபம் பகிரப்பட வேண்டிய விகிதத்தைக் காண்க.

ii. கமல், விமல், சுனில் ஆகியோர் பெறும் இலாபத்தினைத் தனித்தனியாகக் காண்க.

(2+3+7= 12 புள்ளி)

02] a) ரூ. 5000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் ஒரு வருடத்தின் பின் ரூ.400 ஐ வட்டியாகச் செலுத்தினாரெனில் அவர் செலுத்திய வட்டிச் சதவீதத்தைக் காண்க.


b) ஒருவரின் மாதச்சம்பளம் ரூ.60000 ஆகும். அவர் அப்பணத்தில் 60% ஐ உணவிற்கும் 25% ஐ போக்குவரத்திற்கும் செலவழித்து பின் எஞ்சியதை வேறு செலவுகளுக்கும் ஒதுக்குகின்றார்.

i) உணவிற்காகச் செலவழித்த பணத்தொகை யாது?

ii) போக்குவரத்திற்குச் செலவழித்த பணத்தொகை யாது?

iii) வேறு செலவுகளுக்கு ஒதுக்கிய பணத்தொகை யாது? (3+3+3+3=12புள்ளி)

03] a) பத்மினி தனது பாடசாலை மைதானத்தில் P எனும் இடத்திலிருந்து தன்னைச் சுற்றியுள்ள இடங்களை அவதானித்தார். இவ்வாறு அவதானிப்பதைக் காட்டும் பருமட்டான வரிப்படம் அருகிலுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக.




| P இலிருந்து அவதானிக்கப்பட்ட இடம் | P இலிருந்து திசை | P இலிருந்து தூரம் |
|---|---|---|
| கிணறு | வ $30^0$கி | 25m |
| ……………………….. | ……………………….. | ……………………….. |
| ……………………….. | ……………………….. | ……………………….. |
| ……………………….. | ……………………….. | ……………………….. |

b) A எனும் புள்ளியிலுள்ள சரவணன் மேற்குத் திசையில் 150m தூரத்திலுள்ள B எனும் புள்ளியை அடைகின்றார். அங்கிருந்து வடக்குத் திசைநோக்கிச் சென்று 150m தூரத்திலுள்ள C எனும் புள்ளியை அடைகின்றார்.

i) இத்தகவல்களை பருமட்டான வரிப்படத்தில் காட்டுக.

ii) தற்போது சரவணன் ஆரம்பப் புள்ளியிலிருந்து எத்திசையில் காணப்படுகின்றார்?

(9+2+1=12 புள்ளி)

04] a) கவராயத்தையும் வரைகோலையும் பயன்படுத்தி 6cm , 6cm, 5cm பக்கநீளங்களைக் கொண்ட முக்கோணியை அமைக்க. இது பக்கங்களினடிப்படையில் எவ்வகையான முக்கோணியாகும்?

b) i) 5m ஆரையுடைய வட்டமொன்றை வரைந்து அதன் மையத்தை O எனப் பெயரிடுக.

ii) அதில் 8cm நீளமான நாண் ஒன்றை வரைந்து AB எனப் பெயரிடுக.

iii) நாண் AB இன் நடுப்புள்ளியை P எனக் குறித்து OP ஐ இணைக்க.

iv) $O\hat{P}A$, $O\hat{P}B$ என்பவற்றின் பெறுமானங்களை அளந்து எழுதுக.

(4+2+2+2+2=12புள்ளி)

05] a) குறித்த பாடசாலையொன்றிலுள்ள தரம் 8 இலுள்ள 10 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு,

49, 95, 58, 64, 39, 74, 49, 85, 60, 55

i) வீச்சைக் காண்க.

ii) ஆகாரம் யாது?

iii) இடையம் யாது?

b) ஒரு குழுவிலுள்ள 4 மாணவர்களின் இடைத்திணிவு 39kg ஆகும். இக்குழுவில் மேலும் ஒரு மாணவன் இணைந்து கொண்ட பின் அவர்களின் இடைத்திணிவு 40kg ஆகக் காணப்பட்டது.

i) 4 மாணவர்களின் மொத்தத் திணிவைக் காண்க.

ii) புதிதாக இணைந்து கொண்ட மாணவனின் திணிவைக் காண்க.

(2+1+3+2+4=12 புள்ளி)

06] a) வெற்றிடத்தில் பொருத்தமான குறியீட்டை இடுக.

i) 15………{3 இன் மடங்குகள்}

ii) கறுப்பு……….{வானவில்லிலுள்ள நிறங்கள்}

b) A={“MATHEMATICS” எனும் சொல்லிலுள்ள எழுத்துக்கள்} எனில், தொடை A ஐ மூலகங்களை எழுதி n(A) ஐக் காண்க.

c) பை ஒன்றினுள் ஒரே அளவான 3 சிவப்பு நிறப்பந்துகளும் 4 பச்சை நிறப்பந்துகளும் 5 நீல நிறப்பந்துகளும் உள்ளன. பையிலிருந்து ஒரு பந்து எழுமாறாக எடுக்கப்படும்போது அது

i) நீல நிறப்பந்தாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

ii) சிவப்பு நிறப்பந்தாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

iii) பச்சை நிறப்பந்தாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(2+2+3+1+2+2=12 புள்ளி)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457